DEPOSITION OF WITNESS
(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM
C.C.No.130/2025
PW - 3

| | | |
|---|---|---|
| Name | : | பாஸ்கரன் (Lw - 3) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 23.06.2026**

நான் தற்போது செங்கரை காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2025ம் வருடம் சேந்தமங்கல் காவல்நிலையத்தில் பயிற்சி காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன்.

கடந்த 16.02.2025ம் தேதி 16.00 மணிக்கு எனது தலைமையில் தலைமை காவலர் திரு.செழியன் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.பெரியசாமி ஆகியோர் மதுவிலக்கு குற்ற தடுப்பு நடவடிக்கையாக சேந்தமங்கலம் காமராஜர்புரத்தில் உள்ள எதிரியின் பெட்டிக்கடை அருகே கண்காணித்து சென்றபோது அங்கு சந்தேகப்படும் வகையாக அங்கு நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் கேட்டு தெரிந்துகொண்ட எதிரியை பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் சுபாஸ்சந்திரபோஸ் என்றும் அரசு மதுபான பாட்டில்களை வாங்கி அதிக விலைக்கு விற்பனை செய்து வருவதாகவும், தான் தன்வசம் 180 மி.லி. அளவு கொண்ட Top Stat – 24 மற்றும் 180 Ml அளவுள்ள Monitor – 1 ஆக மொத்தம் 25 அரசு மதுபான பாட்டில்களை வைத்திருப்பதாகவும் ஒப்புக்கொண்டவரை 16.20 மணிக்கு காரணம் கூறி கைது செய்தேன்.

பின்பு எதிரி தானாக முன்வந்த ஆஜர் செய்த 180 மி.லி அளவு கொண்ட Black Pearl – 30 அரசு மதுபான பாட்டில்களை 16.45 மணிக்கு தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.பெரியசாமி மற்றும் தலைமையில் தலைமை காவலர் திரு.செழியன் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து

கைப்பற்றினேன். பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து கைப்பற்றப்பட்ட மதுபான பாட்டில்களை நாமக்கல் காவல் உதவி ஆணையாளர் (கலால்) அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு எதிரி மீது சேந்தமங்கலம் காவல்நிலைய குற்ற எண்.48/2025 சட்டபிரிவுகள் 4(1)(C) TNP Act-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அசலை கனம் நீதிமன்றத்திற்கும், ஒரு நகலை உரிய அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துவிட்டு ஒரு நகலை எனது புலன் விசாரணைக்காகவும் எடுத்துக்கொண்டேன். **(**முதல் தகவல் அறிக்கை அ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

பின்பு சாட்சிகள் தலைமையில் தலைமை காவலர் திரு.செழியன் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.பெரியசாமி ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை தன்ன பிணையில் விடுவித்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டபிரிவுகள் 4(1)(C) TNP Act-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவ இடத்திற்கு அருகில் நிறைய வீடுகள் மற்றும் கடைகள் உள்ளன என்றால் சரிதான். எதிரி சாக்குப்பையில் மதுபானங்களை வைத்திருந்தாக கூறியுள்ள நிலையில் சாக்குபையை கைப்பற்றினேமா என்றால் எனக்கு நினைவில் இல்லை. எதிரி மதுபான பாட்டில்களை எந்த கடையில் வாங்கினார் என்பதை குறித்து யாரையும் விசாரிக்கவில்லை என்றால் எனக்கு நினைவில் இல்லை. எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். நான் சொன்னவாறு சொன்ன விதத்தில் சம்பவ இடம் சென்று வழக்கு சொத்துக்களை கைப்பறவில்லை என்றாலும் புள்ளி விபர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கில் காவல்நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் மதுபானம் தான் என்பதனை உறுதி செய்யும் வன்னம் மாதிரி எடுத்து ஆய்வுக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**